RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2223S129

# Changes in the Lives of Students due to Education in a Contemporary Environment

## சமகாலச் சூழலில் கல்வியினால் மாணவர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள்

**M. Mahalakshmi** [a,*]

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts & Science, Thellar, Tiruvannamalai-604408, Tamil Nadu, India.

*Corresponding author Email: drmmahalakshmi16@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S129

Received: 13-04-2022; Revised: 15-07-2022; Accepted: 23-07-2022; Published: 20-08-2022

**Abstract:** Time is powerful. No matter where or what changes in life, only time has the power to change everything and run unchanged. Time unfolds as history for us. At such a time, changes are happening in many fields, like politics, culture, education, medicine, and communication. These changes have advantages and sometimes disadvantages depending on the nature of the user. In that way, this review article aims to investigate the changes in the lives of students due to the changes that have occurred in the education sector: learning time, learning methods, learning aids, punishments for students, etc. Education has always been a tool to help students. This will bring good changes. Education is not like it was during the Sangam era. It can be seen that this review article compares with ancient education and realises that education provides good development in life to students as education for all and non-punitive education, education that provides learning equipment, computer-based online education, and distance education that can be learnt from home. In the future, education will become an education where the teacher learns directly. Just as nature does well but occasionally produces evil, so in education, often good development is found. Disadvantages in education are due to the character of the learner.

**Keywords:** Education, Sangam Era, Teacher, Development

**Language:** **Tamil**

## முன்னுரை

காலம் வலிமையானது. வாழ்க்கையில் எங்கு, எது மாறினாலும் அனைத்தையும் மாற்றிக்கொண்டு மாறாமல் ஓடிக் கொண்டிருக்கும் சக்தி காலத்திற்கு மட்டுமே உண்டு. காலமே நமக்கு வரலாறாய் விரிந்து நிற்கிறது. அப்படிப்பட்ட காலத்தில் அரசியல், பண்பாடு, கல்வி, மருத்துவம், தகவல்தொடர்பு எனப் பல துறைகளிலும் மாற்றங்கள் காலந்தோறும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இம்மாற்றங்களால் நன்மைகளும் சில சமயங்களில் பயன்படுத்துவோரின் தன்மையைப் பொருத்துத் தீமைகளும் ஏற்படுகின்றன. அந்த வகையில் கல்வித்துறையில் கற்றலுக்குரியோர், கற்பதற்கான காலம், கற்கும் முறைகள், கற்க உதவும் சாதனங்கள், மாணவர்க்கான தண்டனைகள் முதலானவற்றில் காலந்தோறும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களால் மாணவர்கள் வாழ்வில் ஏற்பட்ட வாழ்வியல் மாற்றங்களை ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## கல்வியின் தேவையும் சிறப்புகளும்

கல்வி என்பது ஒரு சமூகச் செயல்பாடு ஆகும். தனிமனிதன் கற்கும் கல்வியால் சமூகமும் வளர்ச்சி அடைகின்றது. கற்றவர்களைக் கண் உடையவர் என்றும் கல்லாதவர்களைப் புண் உடையவர் என்றும் கூறும் மரபு தமிழர் மரபாகும். “இளமையில் கல்” என்றும் “கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்றும் அவர்கள் அயல்நாடு செல்லும்போது கட்டுச்சோறு கட்டிக்கொண்டு போக வேண்டிய தேவை இல்லை என்றும் ஒருவர் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் தொடர்ந்த வந்து உதவும்

என்றும் பிச்சை எடுத்தாவது கல்வியைக் கசடறக் கற்றுவிட வேண்டும் என்றும் திருவள்ளுவர், ஔவையார், முன்றுறையரையனார், அதிவீரராம பாண்டியன் முதலான புலவர் பெருமக்கள் கல்வியின் தேவையையும் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்தியம்பி உள்ளனர். கல்வியிலேயே மருத்துவம், அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், பாலியல் என்றும் முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி என்றும் ஆசிரியர் மைய, மாணவர் மையக் கல்வி என்றும் பல துறைகள் அமைந்து கல்வித்துறையின் நல்ல வளர்ச்சியைச் சுட்டுவதோடு காலந்தோறும், அதில் முன்னேற்றங்கள் இருப்பதையும் உணர்த்துகின்றன.

## காலந்தோறும் கல்விச் சிந்தனைகள்

தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியம் முதல் சமகாலம் வரை கல்வி பற்றிய கருத்துகள் பரவலாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியப் புலவர்கள் கணக்காயராக இருந்துள்ளமையை அவர்கள் பெயர் கொண்டு அறிய முடிகிறது. சங்க மருவிய நூல்களுள் அறநூல்கள் அனைத்துமே கல்வி பற்றிச் சிந்தித்துள்ளனகம்பரும் கல்வி முற்ற வல்லாருமில்லை என்று கல்வி பற்றிச் சிந்தித்துக் கூறியுள்ளார். உரையாசிரியர்களின் தோற்றம் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குச் சான்றாய்த் திகழ்கின்றது. பிற்கால நீதி நூல்களான மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன், அறநெறிச்சாரம், ஆத்திசூடி முதலான நூல்களிலும் கல்வி பற்றிக் கூறப்பட்டுள்ளன. மதம் சார்ந்த மடங்களில் சமயக் கல்வி போதிக்கப்படுவது இன்றளவும் நிகழ்ந்து வருகின்றது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுக் கல்வி குறித்த ஆய்வுகள் நிகழ்ந்துள்ளமையை புரோபெல்லின் கிண்டர் கார்டன், மாண்டிசோரி கல்வி முறை, கோத்தாரி கல்விக்குழு முதலான பெயர்களின்வழி அறிய முடிகிறது. கல்வி தனியார் மயம் ஆனபிறகு கல்வியின் வளர்ச்சியில் அசுரவேகம் தென்படுகிறது. இவ்வாறு சங்க காலம் முதுல் கல்விச்சிந்தனைகள் வளர்ச்சி நோக்கிச் செல்வதை இன்றைய காலம்வரை உணரலாம்.

## தொடக்கக் காலக் கல்விமுறை

தொடக்கத்தில் ஏடும் எழுத்தாணியும் அற்ற ஒலிவடிவக் கல்வியே இருந்து வந்தது. தனக்குள்ள அறிவை அல்லது தான் கற்ற அறிவைப் பிறருக்கும் அடுத்த தலைமுறையினர்க்கும் வாய் வழியாகவே திரும்பத் திரும்பக் கூறிப் பதியச் செய்யப்பட்டது இது வாய்மொழிக் கல்வி எனப்பட்டது. சான்றாக இறையனார் களவியல் என்ற நூலிற்கு நக்கீரர் உரை கிடைக்கும் முன்பு பல்வேறு தலைமுறைக்கு வாய் வழியாகவே சொல்லலிச் சொல்லிப் பதியப்பட்டமையைக் கூறலாம். கற்பிப்போரைத் தேடிச் சென்று கற்ற காலமாக அது இருந்தது.

ஓலைச்சுவடிகளும் எழுத்தாணிகளும் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு ஓவிய எழுத்து, சித்திர எழுத்து, கருத்தெழுத்து என்று பல கட்டங்களைக் கடந்து வரிவடிவக் கல்வி ஆரம்பமானது. சங்கம் வைத்து மொழியானது வளர்க்கப்பட்டது. திண்ணைப் பள்ளி எனும் குருகுலக் கல்விமுறையில் செல்வந்தர், மன்னர் தலைமுறையே தொடர்ந்து கற்று வந்த நிலையே இருந்தது.

“ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன”

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார் (Sanmugam pillai, 2010). அதாவது ஓதல் எனும் கல்வி உயர்ந்தோர்க்கு மட்டுமே இருந்தது என்றும் கீழ்மக்கள் இதற்கு உரிமை அற்றிருந்ததையும் இந்நூற்பா நமக்கு உணர்த்துகின்றது.

“தன்மகன் ஆசான் மகனே மன்மகன்

பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே

உரைகோ ளாளற் குரைப்பது நூலே”

என நன்னூலும் இதையே உணர்த்துகின்றது (Pavanandi Munivar, 1980). தற்காலச் சூழலில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இன்றி அடித்தட்டு மக்களும் கல்வி பெறும் சூழல் நிலவுவதால் சமூகத்தில் நல்ல வளர்ச்சியைக் காண முடிகின்றது. கல்விக்குரிய காலத்தால் மாற்றங்கள்

கல்வி எனும் ஓதலுக்காகப் பிரியும்போது மூன்றாண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. “வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது” என்பது தொல்காப்பிய நூற்பா (Sanmugam pillai, 2010). திருமணம் ஆன பிறகும் கல்விக்காகத் தலைவன் தலைவியை விடுத்துச் சென்றமை குறித்தும் தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது. ஆனால் பெண்கள் கற்றமை பற்றியோ திருமணத்திற்குப் பின் தலைவனைப் பிரிந்து கல்விக்காகச் சென்றமை பற்றியோ தொல்காப்பியத்தில் குறிப்புகள் இல்லை.

சமகாலத்தில் கல்வியின் கால வரையறையானது கரையின்றி உள்ளது. மூன்றாண்டுகள் கடந்து உயர்கல்வி கற்பவர்களாக ஆண்களும் பெண்களும் இருத்தல் மட்டுமன்றி அயல் நாடுகளுக்குச் சென்று கற்கும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் இவர்கள் தங்கள் தரத்தை மேலும் உயர்த்திக்கொள்ள வழி கிடைக்கிறது. திருமணமான பின்பு பெண்கள் கற்றல் மட்டுமன்றிக் குழந்தைகள் பெற்ற பின்புகூடக் கற்பதும் கூடுதலாகப் பல பட்டங்களைப் பெற கற்பதும் நிகழ்கிறது. தொலைதூரக் கல்வி என்னும் வீட்டிலிருந்தே கல்வி கற்கும் சூழலும் கற்றோரின் மத்தியில் பெருத்த வாழ்வியல் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இதில் ஆண்களை விடப் பெண்கள் பலர் அதிகமான கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது. அரசுவேலை செய்பவர்களும் பகுதி நேரமாகத் தொலைதூரக் கல்வி பயின்று தங்கள் வருவாயைப் பெருக்கிச் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ இத்தகைய கல்வி மாற்றங்கள் பெருந்துணை புரிகின்றன.

## கல்விச் சாதனங்களால் மாற்றங்கள்

கல்வி அனைவராலும் கற்க இயலாத காலகட்டம் ஒன்று சங்க காலத்தில் இருந்தது. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் இந்நிலை மாறி கல்வி கற்க இயலாத ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கு உதவும் சாதனங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

“ஊணொடு கூறை யெழுத்தாணி புத்தகம்

பேனொடு மெண்ணு மெழுத்திவை - மாணொடு

கேட்டெழுதி யோதி வாழ்வார்க் கீய்ந்தாரிம் மையான்

வேட்டெழுத வாழ்வார் விரிந்து”

என்று உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் அளித்துக் கல்வி கற்பிக்கப்பட்டதைக் கணிமேதாவியார் உணர்த்துகின்றார் (Kalappal Kumaran, 2009). அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் வந்தபிறகு ஏழை மாணவர்களும் கல்வி பெறும்வண்ணம் சத்துணவு, செருப்பு, மிதிவண்டி, கணினி போன்ற பொருட்களும் கூடுதலாகத் தரப்பட்டு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இன்றைய சூழலில் கணினி என்பது நம் வாழ்க்கையில் உயிர் மூச்சு போன்றதாகி விட்டது. கணினியைப் பற்றி தெரியவில்லை என்றால் ஒன்றும் தெரியாதவன் என்று அர்த்தம் கொள்ளும் அளவிற்கு கணினி சார்ந்த படிப்பு அசுர வேகத்தோடு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. கணினியின் தேவை சமகாலச் சூழலில் மிக அவசியமானது என்பதால் மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கணினி வழங்கப்படுகின்றது. இதனால் ஏழை மாணவர்கள் மிகவும் பயனடைவதைக் காண முடிகின்றது. இணையவழிக் கல்வி இதற்கு மிகப்பெரிய சான்றாகும்.

## கற்பதற்குரியோர் வரையறையால் மாற்றங்கள்

கல்வி கற்பதற்கு உரியவர்கள் எவர் என்பதில் தொடக்கக் காலத்தில் குறிப்பிட்ட வரையறைகள் இருந்தன. யார் வேண்டுமானாலும் எளிதில் கல்வி கற்றுவிட முடியாத சூழல் இருந்தது. யாருக்குக் கல்வியைச் சொல்லக் கூடாது என்பதில் மிக கவனமாக இருந்ததை

“களிமடி மானி காமி கள்வன்

பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்

தடுமா றுளத்தன் தறுகணன் பாவி

படிறனின் னோர்க்குப் பகரார் நூலே"

என்ற நூற்பாவழி அறிந்து கொள்ளலாம் (Pavanandi Munivar, 1980). இவர்கள் மாணாக்கர் ஆகாதவர் என்று குறிப்பிடப்படுகின்றனர். இச்சூழல் மாறி இவற்றில் பலர் கல்வி கற்கும் சூழல் இப்போது உருவாகியுள்ளது. தனிமனித உரிமை என்ற விதத்தில் உளவியல் சார்ந்து இவர்களில் பலர் கல்வி கற்கும் சூழல் பெற்றுள்ளதால் அவர்களின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய பண்பு கொண்டவர்களை நல்வழிக்கு மாற்றும் சாதனமாகக் கல்வி அமைவது அவர்கள் வாழ்வியலில் உயர்ச்சியையே காட்டும்.

## ஆசிரியர் மாணவர் உறவால் மாற்றங்கள்

ஆசிரியர் இரண்டாம் பெற்றோர் எனக் கருதப்படுகின்றனர். ஆசிரியரைக் கடவுளாகப் பார்த்த பார்வையும் முற்காலத்தில் உண்டு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தெய்வத்திற்கு முன்பாக குரு மதிக்கப்படுகின்றார். குரு மீது பக்தி கொண்ட மாணவர்களாக ஏகலைவனையும் கர்ணனையும் கூறலாம். குருவுக்காகத் தன் கைவிரலையே அரிந்து தட்சணையாக அளித்த ஏகலைவனின் தன்மையும் தன் தொடையை வண்டு துளைத்தும் தன் குருநாதரின் தூக்கம் களைந்துவிடக் கூடாது எனப் பொறுத்துக்கொண்ட குருபக்தியும் கொண்ட நாடு நம்நாடு.

ஆசிரியர் என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்றும் ஆசிரியரிடம் மாணவர் எவ்வாறெல்லாம் பாடம் கேட்க வேண்டுமென்றும் நன்னூல் விரிவாகக் கூறுகின்றது.

"அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி

நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோ

டெத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்

அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே"

என்ற தன்மை இப்போது மாணவர்களிடம் காணப்படுவதில்லை. ஆசிரியர் மூலம் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என நினைக்கும் மாணவர்கள் மிகக் குறைவே. தொழில் நுட்ப வளர்ச்சியால் மாணவர்களே தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதனால் ஆசிரியரின் தயவு அவருக்குத் தேவைப்படுவதில்லை. இதனால் ஆசிரியரை எதிர்பார்த்து வாழ வேண்டிய தேவை அவர்களுக்குக் குறைகின்றது (Pavanandi Munivar, 1980). இதனால் ஆசிரியர் மாணவர் உறவில் விரிசல் ஏற்படுகின்றது. இவ்விரிசலால் மாணவர்கள் ஒழுக்கம் குன்றி அவர்கள் வாழ்வியலில் மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம்.

## தண்டனையால் மாற்றங்கள்

தண்டனை என்பது திருந்துவதற்கான வழிமுறையாகக் கல்வியில் பார்க்கப்படுகின்றது. ஆசிரியர் சொன்ன செயலைச் சரிவரச் செய்யாத மாணவர்களுக்கு ஆசிரியர் தண்டனை அளித்தது பற்றிய பதிவும் தமிழில் காணப்படுகின்றது. "மற்பொலி திண்டோட் டென்னன்", எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல் ஒன்று பாடல்களைச் சரியாக ஒப்புவிக்காதவன் மற்றவர்களைச் சுமந்து செல்லும் தண்டனை பற்றிக் குறிப்பிடுகிறது (Govindarajan.1994).

காலதாமதமாகப் பள்ளிக்கு வரும் மாணவர்களை மைதானத்தில் ஓட விடுவதும், பிரம்பால் அடிப்பதும், காதைத் திருகுவதும் தண்டனையாக இருந்தது. பெற்றோரே ஆசிரியரிடம் கண்ணை மட்டும் விட்டுவிட்டு எங்கு வேண்டுமானாலும் அடியுங்கள் என்று சொன்ன காலமும் உண்டு. இதனால் அச்சம் கொண்டு தவறான செயல்களில் ஈடுபடாமல் பாடங்களை மாணவர்கள் படித்தனர். தற்காலச் சூழலில் இத்தண்டனைகள் ஏதும் இல்லை. மாணவர் மையக் கல்வியாக மாறிய பின் மாணவர்களை அடிப்பதும் திட்டுவதும் கூடாது என்று அரசே கூறிவிட்டதால் மாணவர்களுக்கு ஆசிரியர் மீதான அச்சம்

இல்லாமல் போனதால் சிலர் தவறான பாதையில் செல்லும் சூழலும் ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் வாழ்வில் சரிவைச் சந்திக்க நேரிடுகின்றது.

## இணையவழிக் கல்வியால் மாற்றங்கள்

கல்வி தடைபடுமாயின் சிந்திக்கும் ஆற்றல் குறைந்து ஒழுக்கம் நலிந்து தீய வழியில் மாணவர்கள் செல்ல நேர்ந்து விடும். கல்வி கற்பிக்கும் இடத்திற்கே நேரடியாகச் சென்று கற்கும் கல்விமுறையில்தான் ஆசிரியரால் மாணவனின் ஒவ்வொரு திறமையும் கண்டுபிடிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது. மாணவனின் இயற்கை ஆற்றல்கள் வளர வழி வகுப்பவர் ஆசிரியர். தற்போதைய கொரோனா ததீநுண்மி காலச் சூழலில் இணையவழிக் கல்வியின் தேவையானது பெருகியுள்ளது. இதன்வழி மாணவர்களின் ஆற்றலை உணர்ந்து கொள்ள இயலாது. சம்பிரதாயத்துக்காக ஆசிரியர் பாடம் எடுப்பதும் கடமைக்காக மாணவர்கள் கலந்து கொள்வதும் வருகைப் பதிவுக்கு மட்டுமே உதவுமே தவிர மாணவனின் உடல், உள்ள, அறிவு, ஒழுக்க, மனவெழுச்சி வளர்ச்சியில் துணைபுரியாது.

இணையவழிக்கல்வி பரவலான பிறகு வேதாந்து நிறுவனம், ஆகாஸ் தொலைக்காட்சி போன்ற நிறுவனங்கள் கல்வியைப் பள்ளியில் வழங்குவது போல கால அட்டவணை போட்டுக் குறிப்பிட்ட பாடங்களைக் குறிப்பிட்ட நேரத்தில் எடுத்து மாணவர்களுக்கு உதவுகின்றன. இவ்வாறான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன்னைச் செதுக்கிக் கொள்ளும் மாணவர்களும் உண்டு. இதனால் அவர்களின் வாழ்வில் மிகச் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்படும். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இவ்வாய்ப்புகள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

## முடிவுரை

கல்வி என்றைக்கும் உதவக்கூடிய சாதனமாக மாணவர்களுக்கு உள்ளது. இதனால் நல்ல மாற்றங்களே உண்டாகும். சங்க காலத்தில் இருந்தது போலக் கல்வி தற்போது இல்லை. அனைவருக்கும் கல்வியாகவும் தண்டனை இல்லாக் கல்வியாகவும் கற்கும் உபகரணங்கள் தந்து உதவும் கல்வியாகவும் கணினி சார்ந்த இணையவழிக் கல்வியாகவும் வீட்டிலிருந்தே கற்கும் தொலைதூரக் கல்வியாகவும் மாணவர்களுக்கு வாழ்வியலில் நல்ல வளர்ச்சியையே தருவதாகக் கல்வி அமைகின்றது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை தொடக்ககாலக் கல்வியோடு ஒப்பிட்டு உணர்த்தியதை அறியலாம். இனி வரும் காலங்களில் கல்வியானது ஆசிரியர் நேரடியாக இன்றிக் கற்கும் கல்வியாகவே மாறும் சூழல் ஏற்படும். இயற்கை நல்லதையே செய்தாலும் எப்போதாவது தீமையை உண்டுபண்ணுதல் போலக் கல்வியிலும் பெரும்பாலும் நல்ல வளர்ச்சியையே காண இயலும். கல்வியில் தீமை என்பது கல்வி பெறுவோரின் தன்மையைப் பொருத்ததாகும்.

## References

Govindarajan, M., (1994) Tamil Noolgalil Kalvi, Saraswathi Pathippagam, Chennai, India.

Kalappal Kumaran, (2009) Pathinenkilkanakku Noolgal, Manavar Pathippagam, Chennai, India.

Pavanandi Munivar, (1980) Sivagnana Munivar Viruthiyurai, Kazhaga Veliyeedu, Chennai, India.

Sanmugam pillai, M., (1996) Tolkappiyam, Mulai nilaiyam, Chennai, India.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

M. Mahalakshmi, Changes in the Lives of Students due to Education in a Contemporary Environment Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 148-153. DOI: https://doi.org/10.54392/ijmrd223S129